# 7

# தேவனுடைய மாளிகை

*"அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் " (எபே. 2:21, 22).*

கர்த்தருக்கென்று சாலொமோனால் ஆலயம் கட்டப்பட்டது பழைய ஏற்பாட்டின் காலத்தில் மாபெரும் கட்டிடப் பணியாக இருந்திருக்க வேண்டும். ''கர்த்தருக்கென்று வீட்டை'' கட்டும் விருப்பமானது தாவீதினால் விளக்கியுரைக்கப்பட்டது, ஆனால் தேவன் தாவீதினிடத்தில் நாத்தான் மூலமாக, அந்த சிலாக்கியமானது தாவீது யுத்த மனிதராய் இருந்த காரணத்தினால் (2 சாமு. 7:5; 1 நாளா. 28:3) சாலொமோனுக்குக் கொடுக்கப்படும் என்று கூறினார். இருந்த போதிலும் தாவீது தமது மரணத்திற்கு முன் ஆலயம் கட்டுவதற்கு பொருட்களைச் சேர்த்து வைக்க அனுமதிக்கப் பட்டார்.

சாலொமோனின் தலைமையின் கீழ், மாபெரும் ஜாக்கிரதை மற்றும் தொழில் நுட்பத்துடன் ஆலயமானது மிக நேர்த்தியான மற்றும் விலை உயர்ந்த பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டது. அது கற்களால் கட்டப்பட்ட போதிலும் அதன்மேல் கேதுரு பலகைகள் போர்த்தப்பட்டு, அப்பலகைகளின்மேல் தங்கத்தால் மூடப்பட்டது. அது உடன் படிக்கைக் கூடாரத்தைப் போல இரு மடங்கு அளவுடையதாக (1 இரா. 5:1-9:9; 2 நாளா. 2-7) இருந்தது, மற்றும் அதைக் கட்டி முடிக்க ஏழரை ஆண்டுகள் ஆயிற்று. மோரியா மலையின் மீது அமைக்கப்பட்ட அந்த ஆலயம் ஒருவேளை ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடச் சென்ற இடத்தினருகில் கட்டப் பட்டிருக்கலாம்.

ஆலயம் கட்டும் வேலைக்கென்று பத்தாயிரம்[1] இஸ்ரவேலர்கள் சேர்க்கப்பட்டனர் (1 இரா. 5:13, 14) மற்றும் இஸ்ரவேலரல்லாதவர்கள் 1,50,000 பேர் அதில் உழைப்பாளர்களாகப் பயன்படுத்தப்பட்டனர் (1 இரா. 5:15; 2 நாளா. 8:7-10). இஸ்ரவேலரல்லாதவர்கள் என்பவர்கள் யுத்தத்தில் பிடிக்கப்பட்ட, கடனுக்கு விற்கப்பட்ட அல்லது வீட்டில் பிறந்த வேலைக்காரர்கள் என்ற நபர்களாய் இருந்தனர். அவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். சுமை சுமப்பவர்கள் எழுபதினாயிரம்

பேரும், கல்லுடைப்பவர்கள் எண்பதினாயிரம் பேரும் ஆவார்கள். இந்த உழைப்பாளிகள் யாவரையும் மேற்பார்வையிட 3,850[2] மேற்பார்வை யாளர்கள் இருந்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மொத்தம் 1,63,850 மனிதர்கள் ஆலயத்தைக் கட்டுவதற்காகத் தொடர்ந்து வேலை செய்தனர். உழைப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோரின் திரளான இந்த எண்ணிக்கையானது இந்தக் கட்டிடத் திட்டப் பணியானது எவ்வளவு மிகப் பெரியதாய் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

ஆலயப் பிரதிஷ்டையில் சாலொமோனின் ஜெபமானது (2 நாளா. 6:3-42) வேதவசனங்களில் உள்ள மிக அழகிய ஜெபங்களில் ஒன்று ஆகும். அவரது ஜெபத்தின் முடிவில், அவர் கர்த்தருக்குப் பலியாக 22,000 காளைகளையும், 1,20,000 ஆடுகளையும் பலியிட்டார் (1 இரா. 8:62, 63; 2 நாளா. 7:4, 5). நாளாகம எழுத்தாளர், "சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகன பலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது" (2 நாளா. 7:1, 2) என்று கூறினார்.

ஆலயமானது கி.மு. 586ல் நேபுகாத்நேச்சார் வந்து அதை அழிக்கும் வரையிலும் இஸ்ரவேல் இனத்தாருக்கு கர்த்தரின் மிகப் பெரிய வீடாக நின்றிருந்தது.

பழைய ஏற்பாட்டின் இந்த ஆலயம்தான் தேவனுக்குக் கட்டப் பட்டவைகளிலேயே மிகப் பெரியதாய் இருந்தது, என்று ஒருவர் சுலபமாய் நினைக்க முடியும், ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை. மிகவும் மாபெரும் கட்டிடம் ஒன்று இயேசுவால் தேவனுக்காகக் கட்டப்பட்டது. அது புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களால் "சபை" என்று அழைக்கப் படுகின்றது, மற்றும் அது உலகத்தின் வரலாற்றில் கட்டப் பட்டுள்ளவைகள் எல்லாவற்றிலும் மிக அதிகம் தனிச் சிறப்பும் மகிமையும் உடையதாக இருக்கின்றது.

எபேசியர் 2ல் பவுல், கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பதற்கும் மற்றும் கிறிஸ்தவராய் இருப்பதற்கும் இடையே உள்ள (புதிய ஏற்பாடு முழுவதிலும் மிகத் தெளிவான) ஒப்பீட்டு அடிப்படையில் உள்ள வேறுபாட்டைக் கொடுத்தார். இந்த வேறுபாட்டை அவர் "முன்னும் மற்றும் பின்னும்" என்ற சித்தரிப்பின் வடிவத்தில் விவரித்தார். எடுத்துக்காட்டாக, ஒருவர் கிறிஸ்தவராகுமுன் அவர் மரித்தவராய் இருக்கின்றார் என்று பவுல் கூறினார். அவர் இந்த உலகத்தின் ஓட்டத்தின்படி பிசாசின் வல்லமையின் கீழ் நடக்கின்றார். கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் போல் வாழ்கின்றார் (எபே. 2:1-3). ஒருவர் கிறிஸ்தவரான பின்பு அவர் மன்னிக்கப்படுகின்றார் என்று பவுல் கூறினார். அவர் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றார், மற்றும் கிருபையினாலே அவர் இரட்சிக்கப்பட்டுள்ளார் (எபே. 2:4-10). பவுல் இந்த ஒப்பீட்டு வேறுபாட்டை முடிக்கையில், நாம் யூதராயினும் அல்லது புறஜாதியாராயினும் கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள ஒருமைப் பாட்டைக் குறிப்பிட்டார். அவ்வாறு செய்ததில், அவர் சபையைக்

குறிப்பிட மூன்று சித்தரிப்புகளைப் பயன்படுத்தினார்: ஒரு நகரம் (2:19), ஒரு குடும்பம் (2:19) மற்றும் ஒரு கட்டிடம் (2:20, 21). சபை என்பதைத் தேவனுடைய கட்டிடம்/மாளிகை என்ற வகையிலான அவரது விவரிப்பானது சபையைப் பற்றிப் பரிசுத்த ஆவியானவரால் நமக்குத் தரப்பட்டுள்ள மிக அழகிய விவரிப்புகளில் ஒன்றாக உள்ளது.

> ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே. 2:19-22).

சித்தரிப்பான வகையில், உருவக நடை மொழியில் பரிசுத்த ஆவியானவர் சபையை தேவனுடைய மாளிகை என்று அழைத்தார். இந்த உருவக விளக்கத்தின் மூலமாக நாம் சபையைக் காண்பதில் அதன் தனிச் சிறந்த இயல்பை நாம் நினைவூட்டப்படுகின்றோம்.

## ஒரு "மனித" மாளிகை

பழைய ஏற்பாட்டின் ஆலயத்தைப் போலின்றி தேவனுடைய புதிய ஏற்பாட்டின் மாளிகையாகிய சபை, மக்களால் ஏற்படுத்தப்பட்டதாய் உள்ளது. இந்த மாளிகை ஒன்றிணைத்து உருவாக்கப்படுவதற்கான பொருளை ஒவ்வொரு கிறிஸ்தவரும் அளிக்கின்றார்.

புறஜாதியாரிலிருந்து கிறிஸ்தவரானவர்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களாகி, இயேசு கிறிஸ்துவை மூலைக் கல்லாகக் கொண்டவர்களாய் இருக்கின்றனர் என்று பவுல் கூறினார். யூதரோ அல்லது புறஜாதியாரோ யாராயிருப்பினும் அவர் கிறிஸ்தவராகுகையில் தேவனுடைய மாளிகையில் இசைவாய் இணைக்கப்படுகின்றார். பேதுரு இதே போன்ற ஒரு ஒப்புவுமையை 1 பேதுரு 2:5ல் ஏற்படுத்தினார்: "ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் ... பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்."

சபை என்பது ஒரு மாளிகையாய் உள்ளது, ஆனால் அது கிறிஸ்தவர்களாய் ஆன மக்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவிக்குரிய மாளிகையாய் உள்ளது. அந்த மாளிகையில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆவிக்குரிய கல்லாயிருக்கின்றார். ஜீவனுள்ள கற்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் மாளிகையுடன் உருவகமாய் ஒப்பிடப்படுகின்ற காணவியலாத, இயங்குகின்ற, ஆவிக்குரிய உயிர்ப் பொருளில், தேவனுடைய

ஆவியானவரால் ஒன்றாய் இணைக்க அல்லது ஒட்ட வைக்கப்படுகின்றனர்.

பவுலின் சித்தரிப்பானது, பல நூறு சிறு நிறுவனங்கள் ஒரு மாபெரும் கட்டிடத்தை ஏற்படுத்த ஒன்றாய் வகைப்படுத்தப்பட்டது என்பதாய் இருப்பதில்லை. உலகளாவிய சபை என்பது உலகத்தின் எல்லா நாமகரணக் கூட்டங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதாகப் புதிய ஏற்பாடு விவரிப்பதில்லை. மாறாக அது, கிறிஸ்துவின் பிராந்திய சபைகள் ஒவ்வொன்றும் தன்னில் தானே நிறைவுடையதாக, உலகளாவிய சபையின் உள்ளூர் வெளிப்பாடாக உள்ளது என்றே விவரிக்கின்றது.[3] உலகளாவிய சபை என்பது உலகம் முழுவதிலும் சபை என்ற இந்த ஆவிக்குரிய அமைப்பில் ஜீவனுள்ள கற்களாக ஊழியம் செய்கின்ற கிறிஸ்தவர்களான தனிநபர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சபை என்பதை இயல்பான ஒரு கட்டிடம் அல்லது ஆராதனைக்கான இடத்துடன் நாம் ஒருக்காலும் குழப்பிக் கொள்ளக் கூடாது. சபைக் கட்டிடங்கள் பற்றிக் குறிப்பிடும் ஒரு வரி கூட புதிய ஏற்பாட்டில் அடங்கியிருப்பதில்லை. கிறிஸ்தவர்கள் ஆராதிப்பதற்கு முறையாகக் கூடும்படிக் கட்டளையிடப்பட்டுள்ளனர் (எபி. 10:25), மற்றும் இந்தக் கட்டளையானது கூடிவர உள்ள ஓர் இடத்தை மறைமுகமாய் உணர்த்து கின்றது; ஆனால் இடம் என்பது ஒரு வீடாகவோ, ஒரு திறந்த வெளியிட மாகவோ அல்லது அந்த நோக்கத்திற்கென்று வடிவமைக்கப்பட்ட குறிப்பிட்ட கட்டிடமாகவோ இருக்க முடியும் என்பது தெளிவு. ஆராதிக்கும் இடம் பற்றிய விபரமான அறிவுறுத்தல்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் தரப்பட்டிருப்பதில்லை. இது அந்தந்த உள்ளூர்ப் பகுதியில் உள்ள கிறிஸ்தவர்களின் முடிவு மற்றும் உசிதத்திற்கு விடப்பட்டுள்ளது. அவர்கள் ஆராதிக்க முறையாய்க் கூடுவதற்கென்று ஒரு கட்டிடம் கட்டுவதைத் தேர்ந்து கொள்ளலாம், அல்லது ஒரு வீட்டிலோ அல்லது ஒரு திறந்த வெளியிடத்திலோ ஒன்றுகூடுவதை அவர்கள் தேர்ந்து கொள்ளலாம். தேவனுடைய மாளிகையான சபை என்பது ஒரு உள்ளூர்ப் பகுதியில் கூடிவரும் கிறிஸ்தவர்கள் தானே தவிர, அவர்கள் ஆராதிக்கும் இடம் அல்ல என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

பவுலின் கூற்றுப்படி, கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுடைய மாளிகை என்ற வகையில் காண வேண்டும், மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தம்மை அந்த மாளிகையின் முக்கியமானதொரு பகுதியாகக் காண வேண்டும். கிறிஸ்தவர் ஒருவர் தெருவில் நடந்து செல்லுகையில் அவரைக் காண்பவர், “சபை என்ற தேவனுடைய மாளிகையின் ஜீவனுள்ள கல் ஒன்று அதோ செல்லுகின்றது” என்று அவரைப் பற்றிக் கூற முடியும்.

உலகமானது தேவனுடைய சபையை கிறிஸ்தவர்கள் ஆராதிக்கக் கூடும் கட்டிடம் அல்லது இடத்தினால் அல்ல, ஆனால் கிறிஸ்தவர்களைக் கொண்டே தீர்ப்பிடும். நாம் தேவனுடைய மாளிகை என்ற வகையில், அதாவது கிறிஸ்துவின் சபையில் நமது நிலைப்பாட்டிற்கு இசைவான வகையில் நாம் வாழ்கின்றோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

## "ஜீவனுள்ள" ஒரு மாளிகை

*சபை என்பது "மனித" மாளிகையாய் உள்ளது என்ற உண்மையானது சபை "ஜீவனுள்ள" மாளிகையாகவும் உள்ளது என்பதைத் தெளிவாக்கு கின்றது. பழைய ஏற்பாட்டில் சாலொமோனுடைய ஆலயமானது கேதுரு, பொன், வெள்ளி மற்றும் தந்தம் போன்ற உயிரற்ற பொருட்களால் ஏற்படுத்தப் பட்டது, ஆனால் இன்றைய நாளில் தேவனுடைய மாளிகை யானது ஜீவனுள்ள கற்களால் ஏற்படுத்தப்படுகின்றது.*

*பவுல் சபையை ஒருக்காலும் ஒரு நிறுவனம் என்று குறிப்பிட்டதில்லை. எடுத்துக்காட்டாக, நமக்கு முன்பாக உள்ள வசனப் பகுதிகளில் அவர் சபையை ஒரு உயிர்ப் பொருளாக, கிறிஸ்தவர்களால் ஆன ஆவிக்குரிய மாளிகையாக, வாழ்கின்ற மற்றும் வளருகின்ற பொதுவான ஆர்வங் களினால் ஒன்றாகக் கூட்டப்பட்ட மக்கள் குழுவாக மட்டுமின்றி, துடிக்கின்ற உளதான பொருள் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார்.*

*பவுல் எழுதிக் குறிப்பிட்ட இந்த மாளிகையானது மேற் கூரை இல்லாததாக உள்ளது. இதற்கு சுவர்களும், அஸ்திபாரமும் உள்ளது ஆனால் கூரை இல்லை. கிறிஸ்தவர்கள் சுவர்களாய் வடிவமைக்கின்றனர், மற்றும் அஸ்திபாரமானது அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரைக் கொண்டு அமைந்து, இயேசுவை மூலைக்கல்லாகக் கொண்டுள்ளது. மூலைக்கல் என்ற வகையில் கிறிஸ்து வடிவமைப்பு யாவற்றையும் ஒன்று கூட்டி இணைக்கின்றார். கர்த்தருக்கென்று மக்கள் மனம் மாற்றப் படுகையில், அவர்கள் இந்த மாளிகையின் சுவர்களுடன் கூட்டப் படுகின்றனர்; இது உண்மையாயிருப்பதால், புதிய கிறிஸ்தவர்கள் பிறக்கின்ற ஒவ்வொரு தடவையும் மாளிகையானது தொடர்ந்து உயர உயர வளருகின்றது. "எழும்புகிறது" என்று எபே. 2:21ல் மொழி பெயர்க்கப் பட்டுள்ள வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் மீண்டும் ஒருமுறை மட்டுமே எபே. 4:16, சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் முழு சரீர வளர்ச்சி என்ற விளைவை ஏற்படுத்தும் உயிருள்ள இணைப்பில் ஒன்று கூட்டப்படுதலைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.*

*அப். 2ல் லூக்கா சபையைப் பற்றி எழுதினார்: "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (வ. 41). இரண்டு அதிகாரங்களுக்குப் பிறகு அவர், "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" (அப். 4:4) என்று கூறினார். ஒரு குறுகிய காலத்திலேயே, தேவனுடைய மாளிகையானது மூவாயிரம் ஜீவனுள்ள கற்கள் என்ற எண்ணிக்கையில் இருந்து ஐயாயிரம் என்பதாக வளர்ந்தது. அந்தக் காலத்திலிருந்து இடைப்பட்ட ஆண்டுகளில் தேவனு டைய மாளிகையானது தொடர்ந்து வளர்ந்து கொண்டுள்ளது. கடந்த ஆண்டின் இக்காலத்தைக் காட்டிலும் இப்பொழுது அது பெரிதாகியுள்ளது. இயேசு மறுபடியும் வரும் வரையிலும் அது தொடர்ந்து வளரும்.*

*பேதுரு, கிறிஸ்தவர்களை "ஜீவனுள்ள கற்கள்" (1 பேது. 2:5) என்று*

*குறிப்பிட்டார், மற்றும் பவுல் அவர்களை “ஜீவபலி” (ரோமர் 12:1) என்று அழைத்தார். தேவனுடைய இந்த மாளிகையைப் பற்றிய ஒவ்வொன்றும் உயிர் வாழ்கின்றது என்பது நிச்சயம். வேத வசனங்களில், பிதாவாகிய தேவன் “ஜீவனுள்ள தேவன்” (1 தெச. 1:9) என்று அழைக்கப்படுகின்றார். வேதாகமமானது ‘‘ஜீவனும் வல்லமையும் உள்ளதாக’’ (எபி. 4:12) இருக்கின்றது. பேதுருவின் கூற்றுப்படி, இயேசு “ஜீவனுள்ள கல்லாக’’ (1 பேது. 2:4) இருக்கின்றார். கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையானது உண்மையும் அதிகாரப் பூர்வமானதும் ஆகும்; மற்றும் இதன் விளைவாக, இது ஒரு “ஜீவனுள்ள நம்பிக்கையாக” (1 பேது. 1:3) உள்ளது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு தங்கள் கீழ்ப்படிதலின் மூலமாகப் பிரவேசித்துள்ள வழியானது “புதிதும் ஜீவனுள்ளதுமான மார்க்கமாக” (எபி. 10:20) உள்ளது. நித்திய கிறிஸ்து என்ற வகையில் இயேசு பரலோகத்தில் நமக்காக வேண்டுதல் செய்வதற்காக ‘‘எப்பொழுதும் வாழும்’’ மத்தியஸ்தராக இருக்கின்றார் (எபி. 7:25). மரணம்கூட கிறிஸ்துவுக்குள் நமது ஜீவனை எடுத்துப்போட முடியாது என்று நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், நாம் அவரை விசுவாசித்தால் நாம் மரித்தாலும் பிழைப்போம் (யோவா. 11:26).*

---

*சபை என்பது ஒரு மாளிகையாக உள்ளது,*
*ஆனால் அது கிறிஸ்தவர்களாய்*
*ஆன மக்களால் ஆன ஆவிக்குரிய*
*ஒரு மாளிகையாய் உள்ளது.*

---

*ஒரு கிறிஸ்தவர் என்பவர் ஒரு நிறுவன அமைப்பின் அங்கமாய் இருக்கிறதில்லை. அவர், வாழும், வளரும் ஆவிக்குரிய வீட்டில் ஜீவனுள்ள கல்லாய் இருக்கின்றார். தேவனுடைய மாளிகையின் வளர்ச்சிக்காகவும் அழகுக்காகவும் நாம் அன்றாடம் பங்களிக்கின்றோம். வளருவதை ஒருபோதும் நிறுத்தாத ஒரு வீட்டை ஏற்படுத்துவதற்காக மற்ற கிறிஸ்தவர் களுடன் நாம் இணைக்கப்பட்டுள்ளோம். நாம் ஒரு ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும் பொழுது, தேவனுடைய வீட்டிற்கு நாம் இன்னுமொரு ஜீவனுள்ள செங்கல்லைக் கூட்டுகின்றோம். இதற்கு எதிரிடையாக, சில வழிகளில் நாம் மற்ற கிறிஸ்தவர் ஒருவரை அழித்தால், நாம் தேவனுடைய வீட்டிலிருந்து ஜீவனுள்ள ஒரு கல்லை நீக்கிப் போடுபவராய் இருப்போம். ஒவ்வொரு கிறிஸ்தவரும் மற்ற எல்லாக் கிறிஸ்தவர்களுடனும் இணைக்கப்பட்டிருக்கின்றார்; தேவனுடைய மாளிகைக்கு நாம் இணைந்து பங்களிக்கும்படியாக நாம் ஒவ்வொருவரும் மற்றவருடனும், ஒவ்வொருவரும் மற்றவருக்காகவும் வாழ்கின்றோம்.*

# "வாசம்பண்ணும் ஆவியானவரின்" ஒரு மாளிகை

*வீடுகள் வாழ்வதற்காக ஏற்படுத்தப்படுகின்றன, மற்றும் தேவனுடைய மாளிகை இதற்கு விதிவிலக்காய் இருப்பதில்லை. அவருடைய ஆவிக்குரிய வீட்டில் அவரது ஆவியானவர் வாழ்கின்றார்.*

*பவுல், "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே. 2:21, 22) என்று கூறினார். மேலும் கொரிந்தியருக்குப் பவுல், "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரி. 3:16) என்று கூறினார்.*

*தேவன் பரலோகத்தில் கொண்டுள்ளது போலவே பூமியிலும் ஒரு வாசஸ்தலத்தைக் கொண்டுள்ளார். சபையே பூமியில் அவருடைய வாசஸ்தலமாய் உள்ளது. அவர் தமது குடும்பத்துடன் ஆவியில் கூடி அதில் வாசம் பண்ணுகின்றார். சபை என்பது பூமியில் தேவனுடைய காணக் கூடிய அங்கமாய் உள்ளது; தேவன் சபை என்ற தம்முடைய மாளிகையில் அன்றாடம் வாழ்ந்து அதன் மூலம் கிரியை செய்கின்றார்.*

*நான் அர்க்கன்ஸாஸின் ஸ்பிரிங்டேல் என்ற இடத்தில் இருந்து ஆறரை மைல்கள் தொலைவில் இருந்த ஒரு பண்ணையில் சொனாரா சமூகத்தில் வளர்ந்தேன். நான் வளர்ந்த காலத்தில் எங்களது வீட்டிற்கு நேர் எதிரே ஒரு நீரோடை மற்றும் வயல் ஆகியவற்றிற்கு அப்பால், பெரும்பாலும் எப்பொழுதும் காலியாகவே இருக்கும் பழைய வீடு ஒன்றிருந்தது. அந்த வீட்டில் வயதான ஒரு தம்பதியர் இருந்தனர், அவர்களில் ஒருவர் சக்கர நாற்காலியிலேயே இருப்பார். அந்தத் தம்பதியரைப் பற்றி அதிகமாய் எதுவும் நான் நினைவில் வைக்கவில்லை. ஏனெனில் அந்தப் பழைய வீட்டில் அவர்கள் வாழ்ந்த பொழுது நான் சிறு பையனாகவே இருந்தேன். அந்தத் தம்பதியர் மரித்த பொழுது, அந்த வீடானது பல ஆண்டுகளுக்குப் பின் இடிக்கப்படும் வரையிலும் ஏதோ சில காரணங்களுக்காக வெறுமையாகவே விடப்பட்டிருந்தது. அது நீண்ட காலம் காலியாயிருந்த பின் அந்தப் பழைய வீட்டினுள் நான் சென்றதை என்னால் நினைவு படுத்த முடிகின்றது. அந்தத் தம்பதியர் விட்டுச் சென்ற நிலையில் அவ்வீட்டில் தட்டு முட்டுச் சாமான்களும், பாத்திரங்களும், படுக்கைகளும் மற்றும் பிற பொருட்களும் அதே நிலையில் இருந்தன. அதனுள் நடந்து சென்றது எனக்கு அச்சமூட்டும் உணர்வைக் கொடுத்தது. சில காலம் வெறுமையாயிருந்ததால் அது தூசி, பாசி மற்றும் சிதைவின் நாற்றத்தை கொண்டிருந்தது. செய்திப் பத்திரிகைகளும் புத்தகங்களும் பல ஆண்டுகளுக்கு முன் அங்கு வாழ்ந்திருந்த தம்பதியினரின் வாழ்வு மற்றும் செயல்பாடுகளுக்கு ஊமைக் குரலாக வீடு முழுவதிலும் இரைந்து கிடந்தன. அந்தப் பழைய வீட்டைச் சுற்றிப் பார்க்கையில் அது குடியிருப்பற்றிருந்ததே நான் ஆவியை நினைவூட்டும் உணர்வைப் பெற்றுக் கொள்ளக் காரணம் என்பது தெளிவு. அது ஒரு கூடாக*

இருந்தது, சாமான்கள் நிறைந்திருந்தும் அவ்வீடு உயிரற்றுக் காணப்பட்டது. சற்று ஒரு காலத்திற்கு காலியாக விடப்படும் வீடுகள் மற்றும் சிரிப்பும் வாழ்வின் அன்பும் இன்றி விடப்படும் வீடுகள் பரிதாபமான காட்சி கொண்டுள்ளன. அவைகள் வழக்கமாக நிலப்பரப்பின் மீது பழிகேடுகள் ஆகி விடுகின்றன.

அந்த பழைய வீட்டைப் போல சபையானது குடியிருப்பற்று விடப்பட்டால், இதுவும் அதைப் போலவே மதிப்பற்றதாகி விடும். இருப்பினும், உண்மையான சபை என்பது வாழ்வும் சக்தியும் அற்று வெறுமையான கடந்த காலப் பாரம்பரியத்தின் நினைவுச் சின்னமல்ல; அது தேவனுடைய ஆவியானவர் வாசம் பண்ணும் இடம் ஆகும்! தேவன் இவ்வுலகில் வாழும் இடமாக இயேசு அதைக் கட்டினார்.

புறதெய்வ வணக்கமானது அதின் ஆலயங்களை ரோமப் பேரரசு முழுவதிலும் கொண்டிருந்தது. ஆசியாவின் தேவதையான தியானாள் அல்லது ஆர்டெமிஸ்ஸுக்கு எபேசு நகரில் அலங்காரமான கோவில் ஒன்று இருந்தது. யூதத்துவத்திற்கு எருசலேமில் ஆலயமும், ரோம உலகம் முழுவதிலும் சிதறியிருந்த ஜெப ஆலயங்களும் இருந்தன, அங்கு அதன் உறுப்பினர்கள் தேவன் ஒழித்து நீண்ட நாட்களான பின்னும் மோசேயின் பிரமாணத்தை உயிருடன் காக்கப் போராடினார் கள். இருப்பினும் உலகின் மிக அழகு நிறைந்த விரிவான ஆலயம் என்பது தேவனுடைய ஆலயமே ஆகும். அவரது ஆலயம் (மனிதக்) கைகளால் அல்ல ஆனால் தேவனாலேயே ஏற்படுத்தப்படுகின்றது; அது மனிதர்களின் எந்தக் கோவில்களினாலும் இணை செய்ய முடியாத மகிமை மற்றும் கம்பீரத்துடன் ஒளிர்கின்றது, ஏனெனில் தேவன் அதில் வாசம் பண்ணுகின்றார். அப்போஸ்தலர், தீர்க்க தரிசிகள் என்ற தெய்வீக அஸ்திபாரம் மற்றும் இயேசு என்ற மூலைக்கல் ஆகியவற்றின் மீது தேவன் ஜீவனுள்ள கற்கள் ஒவ்வொன்றாக புதிதாய்ப் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவரையும் ஒருவர் மீது ஒருவராகக் கட்டி யெழுப்புகின்றார். தேவனுடைய கிருபையுள்ள கரத்தினால் ஜீவனுள்ள கற்கள் யாவையும் மிகச் சரியாக ஒன்று கூடி இசைவாயிருக்கும்படி ஒவ்வொருவரும் இம்மாளிகையின் சுவரில் வளமிக்க பகுதியொன்றில் வைக்கப்படுகின்றார். இந்தியா, ஆப்பிரிக்கா, ஆஸ்த்திரியா, அமெரிக்கா, உக்ரைன், ரஷ்யா மற்றும் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் மக்கள் கிறிஸ்துவுக்கென்று மனம் மாற்றப்படுகையில் அவர் நாள் தோறும் இதைக் கட்டி எழும்புகின்றார். பின்பு, இந்த ஆவிக்குரிய, காணப்படாத, வளர்ந்து கொண்டிருக்கின்ற மாளிகையில், தம்முடைய ஆவியின் மூலமாக தேவன் தங்கியிருக்கிறார்.

இந்த சத்தியமானது நமது இருதயங்களில் மாபெரும் ஒரு அறை கூவலுடன் வந்தடைய வேண்டும். உலகில் நாம் தேவனுடைய ஆலயமாய் இருக்கின்றோம்! நாம் ஞானம் மற்றும் பரிசுத்தத்துடனும், கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்துடனும் வாழ்வோமாக!

# முடிவுரை

எபே. 2:19-22ல் மாபெரும் மகிமையுள்ள சத்தியமொன்று பவுலினால் அறிவிக்கப்படுகின்றது: சபை என்பது தேவனுடைய மாளிகையாய் உள்ளது. மாளிகை என்ற வகையில் இது “மனிதத்துவமான,” “ஜீவனுள்ள” மற்றும் “வாசம் பண்ணும் ஆவியானவரின்” இடமாய் உள்ளது.

பணக்கார மனிதர் ஒருவர் வெளிநாட்டுக்குச் செல்லவிருந்த பொழுது, தமக்கு ஒரு கட்டிடம் கட்டுதற்காக கட்டிட ஒப்பந்தக்காரர் ஒருவரை வாடகைக்கு அமர்த்தினார். கட்டிடம் கட்டும் திட்டத்திற்கு சுயாதீனமாகப் பயன்படுத்திக் கொள்ளும்படியாக ஏராளமான பணம் அந்த ஒப்பந்தக் காரரிடத்தில் தரப்பட்டது. அந்தக் கட்டிடப் பணிக்கு அவரே முழுப் பொறுப்பாளராக வைக்கப்பட்டார். கட்டிடம் கட்டும் காலத்தில், அந்த ஒப்பந்தக்காரர் பலமான, நம்பத்தகுந்த கட்டிட பொருட்களுக்குப் பதிலாக தரம் குன்றிய, விலை குறைவான பொருட்களைப் பயன்படுத்தி விட்டு, இவ்விரு வகைப் பொருட்களின் இடையே வித்தியாசப்பட்ட விலைக்குரிய பணத்தைத் தம்முடைய பையில் போட்டுக் கொண்டார். அவர் தம் இரகசியத்தைப் பலகை மற்றும் பெயின்ட், செங்கல் மற்றும் சாந்து, தரை மற்றும் சுவர்கள் ஆகியவற்றின் பின்னே மறைக்கும்படி கையாண்டார். முதலாளி திரும்பி வந்த பொழுது வீடானது கட்டி முடிக்கப்பட்டு குடியிருக்கத் தயாராயிருந்தது. வெளியிலிருந்து பார்க்கையில் அந்த வீடானது முதலாளியின் திட்டங்கள் ஒவ்வொன்றின்படியாகவும் கட்டப்பட்டிருந்த தோற்றம் அளித்தது, ஆனால் மனிதக் கண்களால் பார்க்க முடியாதவாறு, போதுமற்ற, விலை குறைந்த பலகைகளும், உத்தரங்களும், குழாய்களும் நீரில் மறைந்துள்ள பொருட்களும் அங்கிருந்தன. அந்த முதலாளி அவ்வீட்டின் சாவியை அந்த ஒப்பந்தக்காரரிடத்தில் கொடுத்து, “இந்த வீட்டை உங்களுக்குச் சொந்தமானதாக நீங்கள் வைத்துக் கொள்ளலாம்” என்று கூறும் பொழுது, அந்த ஒப்பந்தக்காரர் எவ்வளவு திகைப்படைந்திருப்பார்! அந்த முதலாளியை ஒப்பந்தக்காரர் ஏமாற்றியதில், அவர் உண்மையில் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டார்.

நம்மிடத்தில் ஒரு வீட்டைக் கட்டும்படியான பொறுப்பு ஒப்படைக்கப் படவில்லை - நாம் ஒரு வீடாக இருக்கும்படியாகவே கட்டளையிடப் பட்டுள்ளோம்! நாம் ஏதோ ஒரு வீடாக அல்ல, ஆனால் தேவனுடைய வீடாக இருக்க வேண்டியுள்ளது! நாம் கிறிஸ்துவுக்குள் வரத் தவறினால், ஜீவனுள்ள கற்கள் என்ற வகையில் தேவனுடைய மாளிகையின் பாகமாய் இருக்கத் தவறினால், தேவன் மனிதருக்குத் தந்துள்ள மாபெரும் சிறப்புரிமையில் இருந்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம். நாம் தேவனுடைய வீட்டில் பிரவேசித்தும், தேவனால் வடிவமைக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வுக்குப் பதிலாக போதுமற்ற, தரம் குறைந்த வாழ்வை வாழ்வதினால் தேவனுடைய வீடாக வாழத் தவறினால், தேவனுடைய வாசஸ்தலமாக வாழ்வதினால் தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உன்னதமான வாய்ப்பை மீண்டும் நமக்கு நாமே ஏமாற்றி விட்டவர்களாய், நம்மையே நாம் களவு செய்தவர்களாய் இருப்போம்.

*சபையானது தேவனுடைய வசனத்தின் மூலமாக தேவ ஆவியானவரால் கட்டப்படுவதால், சாலொமோன் செய்தது போல நாம் தேவனுக்கென்று ஒரு கட்டிடத்தைக் கட்ட முடியாது, இருப்பினும், சுவிசேஷத் திற்கு நாம் கீழ்ப்படிவதன் மூலமாகவும், நமது "ஜீவனுள்ள கற்களை" அன்றாடம் சீர்படுத்துவதாலும், கிறிஸ்துவை மூலைக் கல்லாகக் கொண்டுள்ள நமது வாழ்வினாலும் நாம் தேவனுடைய மாளிகையாய் இருக்க முடியும்!*

*நீங்கள் தேவனுடைய மாளிகையின் அங்கமாய் இருக்கின்றீர்களா?*

குறிப்புகள்

*[1]மூப்பதினாயிரம் பேர் வேலை செய்யும்படி சேர்க்கப்பட்டனர், ஆனால் ஒவ்வொரு மாதத்திலும் பத்தாயிரம் பேர் மட்டுமே பயன்படுத்தப்பட்டனர். இவ்விதமாக, வேலைக்குச் சேர்க்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் ஒரு மாதம் வேலை செய்தனர் (1 இரா. 5:13). [2]கானானிய அலுவலர்களின் எண்ணிக்கை 3600 என்பதாக 2 நாளா. 2:18 எண்ணிக்கை தருகின்றது. இஸ்ரவேல் அலுவலர்கள் 250 பேர் என்பதாக 2 நாளா. 8:10 எண்ணிக்கை தருகின்றது. இது மொத்தத்தில் 3850 கண்காணிப்பு அலுவலர்கள் இருந்ததாகக் கூறுவதாகும். கீழ்நிலை அலுவலர்கள் 3300 பேர் இருந்ததாக 1 இரா. 5:16 தகவல் அளிக்கின்றது. மேலும், 1 இரா. 9:23ல் கண்காணிப்பு அலுவலர்கள் 550 பேர் இருந்ததாகக் கூறுகிறது. இதுவும் மொத்தம் 3850 கண்காணிப்பு அலுவலர்கள் இருந்ததாகவே, தகவல் அளிக்கும். இவ்விதமாக, கண்காணிப்பு அலுவலர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் 2 நாளாகமமும் 1 இராஜாக்களும் இசைவாய் உள்ளது, ஆனால் இவை இரண்டும் கண்காணிப்பாளர்களை மாறுபட்ட கண்ணோட்டக் கருத்துக்களில் காணுகின்றன.* [3]F. F. Bruce, *The Epistle to the Ephesians* (Old Tappan, N.J.: Fleming H. Revell Co., 1961), 58.

## *படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்*

*1. சாலொமோனால் கட்டப்பட்ட ஆலயத்தைப் பற்றி விவரிக்கவும்.*
*2. எபே. 2ஐப் பயன்படுத்தி, கிறிஸ்தவரல்லாதவர் மற்றும் கிறிஸ்தவர் ஆகியோரிடையே உள்ள ஒப்பீட்டு வேறுபாட்டை கலந்துரையாடவும்.*
*3. எபே. 2:20, 21ல் பவுல் எந்த மூன்று உருவகங்களினால் சபையின் ஒருமைப்பாட்டைச் சித்தரிக்கின்றார்?*
*4. இன்றைய நாட்களில் தேவனுடைய ஆலயம் என்பது "மனிதத்துவ" மாளிகையாய் உள்ளது எவ்விதம் என்பதைக் கலந்துரையாடவும்.*
*5. ''ஜீவனுள்ள கற்கள்'' என்ற சொல்விளக்கமானது சபைகளையா அல்லது தனித்தனிக் கிறிஸ்தவர்களையா எதனைக் குறிப்பிடுகின்றது?*
*6. பூமிக்குரிய வகையில் உள்ள கட்டிடம் (சபைக்கட்டிடம்) பற்றி புதிய ஏற்பாட்டில் எவ்வளவு தகவல் தரப்பட்டுள்ளது?*

7. *நமது ஆராதனை மற்றும் தேவனுக்கு நமது ஊழியம் ஆகியவற்றில் சபைக் கட்டிடத்தின் பங்கு பற்றி கலந்துரையாடவும்.*
8. *சபை எவ்விதத்தில் "ஜீவனுள்ள" மாளிகையாய் உள்ளது?*
9. *சபை என்பது சுவர்களும், அஸ்திபாரமும் உடையது ஆனால் கூரையில்லாதது என்பது எவ்விதம் என்று விளக்கப்படுத்தவும்.*
10. *சபை எவ்விதத்தில் வளர முடியும் என்ற வழிகளை அட்டவணைப் படுத்தவும்.*
11. *"ஆவியானவர் வாசம் பண்ணுதல்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தை விளக்கப்படுத்தவும்.*
12. *தேவ ஆவியானவர் ஏற்படுத்துகின்ற வேறுபாட்டை முக்கியத்துவப் படுத்தி சபையைப் புறதெய்வ வணக்கத்தார்களின் கோவிலுடன் ஒப்பிடவும்.*
13. *ஒரு வீட்டைக் கட்டுவதற்குப் பொறுப்பு ஒப்புவிக்கப்படுதல் மற்றும் வீடாக இருப்பதற்குப் பொறுப்பு ஒப்புவிக்கப்படுதல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டினைப் பற்றிக் கலந்துரையாடவும்.*